வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 25.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

உலகளாவிய பொருளாதார மந்த நிலையிலும் இந்தியா வளர்ச்சியை நோக்கி பயணிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள சுகாதார நிறுவனங்களில், சிறந்த மருத்துவ வசதிகளை பரவலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வலியுறுத்தி உள்ளார்.

இந்தியக் கடலோரக் காவல் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், வரும் மார்ச் மாதம் 10ஆம் தேதி, துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்குவதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்துள்ளார்.

---

மோடி-மாநாடு 1 (16)

உலகளாவிய பொருளாதார மந்த நிலையிலும் இந்தியா வளர்ச்சியை நோக்கி பயணிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அசாம் மாநிலம் குவஹாத்தியில், இன்று உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், இந்தியா, நிலையான பொருளாதார வளர்ச்சியுடன் முன்னேறி வருவதை சர்வதேச பொருளாதார நிபுணர்கள் உறுதி செய்து இருப்பதாக தெரிவித்தார். உலக நாடுகள் நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் வகையில் இந்தியாவின் வளர்ச்சி சார்ந்த

செயல்பாடுகள் உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். அசாம் மாநிலத்தில் உள்ள திறமை வாய்ந்த தொழிலாளர்களின் உழைப்பு, அம்மாநிலத்தை முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக மாற்றும் என்றும், பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். இந்திய இளைஞர்கள், அதிவேகமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை பெற்று வருவதாக தெரிவித்த அவர், அவர்களால்தான் இந்தியாவின் வளர்ச்சிக்கான நம்பிக்கைகள் மின்னுவதாக கூறினார். வறுமையில் இருந்து மீண்டு, நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கி அழைத்துச் செல்லும் புதிய செயல் ஊக்கத்துடன் கூடிய, நடுத்தர வர்க்கத்தினர் மீது தாம் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மோடி-மாநாடு 2 (4)

அரசியல் ஸ்திரத் தன்மை, நல்லாட்சி மற்றும் சீர்திருத்தங்கள் போன்றவை உலகத்திற்கு இந்தியா மீதான நம்பிக்கையை அதிகரித்துள்ளது என்று பிரதமர் கூறினார். இந்த 2 நாள் உச்சி மாநாட்டில் அமைச்சரவை சார்ந்த 7 அமர்வுகளும், பல்வேறு தலைப்புகளில் 14 அமர்வுகளும், நடைபெற உள்ளன.

---------------------------

குடியரசுத் தலைவர் (19)

நாட்டில் உள்ள சுகாதார நிறுவனங்களில், சிறந்த மருத்துவ வசதிகளை பரவலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வலியுறுத்தி உள்ளார். பீகார் மாநிலம், பாட்னா மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் இன்று கலந்து கொண்டு பேசிய அவர், சிறிய நகரங்களில், சிறந்த மருத்துவ வசதிகள் கிடைத்தால், பெரிய மருத்துவமனைகளின் அழுத்தம் குறையும் என்றார். மருத்துவத் துறையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபோடிக்ஸ் பயன்பாடு குறித்து சுட்டிக் காட்டிய அவர், இந்த நவீன தொழில்நுட்பங்களால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதால் மருத்துவர்களின் திறமையும், சிகிச்சையில் துல்லியத் தன்மையும் அதிகரிக்கும் என்றார். 5 ஆயிரத்து 400க்கும்மேற்பட்ட படுக்கைகளை கொண்ட 2ஆவது பெரிய

மருத்துவமனையாக பாட்னா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை மேம்படுத்தும் நடவடிக்கைக்கு அவர் குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி தெரிவித்தார். ஏழை, எளிய மக்களுக்கு சகோதரத்துவ உணர்வுடன் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு.ஆரிஃப் முகமது கான், முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் திரு. ஜே.பி நட்டா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---------------------------

கடலோர காவல்படை (17)

இந்தியக் கடலோரக் காவல் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி, புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், கடலோர காவல்படை வீரர்களுக்கு, சிறப்புமிக்க சேவைக்கான குடியரசுத் தலைவரின் 6 பதக்கங்கள், வீர, தீர செயல்களுக்கான பதக்கங்கள் உள்ளிட்ட 32 பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேசிய திரு. ராஜ்நாத் சிங், கடலோரக் காவல் படையை நவீனமாக்குவதில் அரசு முக்கிய கவனம் செலுத்துவதாக கூறினார். இந்திய கடலோர காவல் படைக்காக 16 விரைவு ரோந்துக் கப்பல்கள், 22 இடைமறிக்கும் படகுகள் உள்ளிட்ட கப்பல்களை வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். இந்திய கடலோரக் காவல் படை, உலகின் மிகவும் திறமையான கடல் பாதுகாப்புப் படைகளில் ஒன்றாக திகழ்கிறது என்றும், அது, இந்தியாவிற்கு மட்டுமல்லாது உலக நாடுகளுக்கும் நம்பகமான பாதுகாப்புப் படையாக திகழ்கிறது என்றும் கூறினார். இந்நிகழச்சியில், பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத், பாதுகாப்புத் துறை செயலர் திரு. ராஜேஷ் குமார் சிங், இந்திய கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநர் திரு. பரமேஸ் சிவமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---------------------------

ஒரே நாடு-ஒரே தேர்தல் (10)

ஒரே நாடு-ஒரே தேர்தல் மசோதா தொடர்பான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் கூட்டம் இன்று புதுடெல்லியில் நடைபெற்றது. நாடாளுமன்ற வளாகத்தில் பிஜேபி உறுப்பினர் திரு. சஞ்சய் ஜெய்ஸ்வால் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினர்களான திருமதி பன்சூரி ஸ்வராஜ், காங்கிரஸ் கட்சியின் திருமதி பிரியங்கா காந்தி, திரு. மனீஷ் திவாரி, லோக் ஜனசக்தியின் திருமதி சாம்பவி சவுத்ரி ஆகியோரும் கலந்து கொண்டனர். உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. யு.யு லலித், தேசிய சட்ட ஆணையத் தலைவர் நீதிபதி திரு. ரித்துராஜ் அவஸ்தி ஆகியோர் கலந்து கொண்டு, தங்களது கருத்துக்களை கூட்டுக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

---------------------------

டெல்லி சட்டப் பேரவை (19)

டெல்லி சட்டப் பேரவையில் இருந்து ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்கள் 12 பேர் இன்று சஸ்பென்ட் செய்யப் பட்டுள்ளனர். புதிய சட்டமன்ற உறுப்பினர்களுடன் இன்று நடைபெற்ற டெல்லி சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தில், துணை நிலை ஆளுநர் திரு. வி.கே சக்சேனா உரையாற்றினார். அவரது உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டதை அடுத்து, எதிர்கட்சி தலைவர் திருமதி அதிஷி உள்ளிட்ட 12 ஆம் ஆத்மி கட்சி உறுப்பினர்களை இடை நீக்கம் செய்து, பேரவைத் தலைவர் திரு. விஜேந்தர் குப்தா உத்தரவிட்டார். இதையடுத்து, இடை நீக்கம் செய்யப்பட்ட ஆம் ஆத்மி உறுப்பினர்கள், தங்கள் மீதான நடவடிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி, சட்டப் பேரவைக்கு வெளியே ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கிடையே, நிலுவையில் உள்ள முந்தைய ஆம் ஆத்மி அரசின் செயல்பாடு குறித்த தணிக்கை அறிக்கையை, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா, டெல்லி சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். இந்த தணிக்கை அறிக்கையில், முந்தைய ஆம் ஆத்மி அரசின் மதுபானக் கொள்கையால், 2 ஆயிரம் கோடி ருபாய்க்கு மேல் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி இருப்பதாக தெரிவிக்கப்

பட்டுள்ளது. மொத்த மற்றும் சில்லரை விற்பனையாளர்கள், உணவகங்கள் போன்றவற்றிற்கு உரிமங்கள் வழங்கியதில் விதி மீறல் காணப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*புதுச்சேரி பட்ஜெட்* (8)

15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின் 6ஆவது கூட்டத் தொடர் வரும் மார்ச் 10ஆம் தேதி, திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு, துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்த சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம், மார்ச் 12ஆம் தேதி, நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, 2025-26ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை தாக்கல் செய்வார் என கூறினார். பட்ஜெட் கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து, அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யும் என்றும் திரு. செல்வம் தெரிவித்தார்.

---------------------------

*அமித் ஷா* (7)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று மாலை கோயமுத்தூர் வருகிறார். கோவையில், நாளை பிஜேபி கட்சியின் அலுவலகத்தை திறந்து வைக்கும் அவர் கட்சி சார்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். உள்துறை அமைச்சரின் வருகையை முன்னிட்டு, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிஜேபி மூத்த தலைவர்கள் உள்ளிட்டோரும் கோவை வந்துள்ளனர்.

---------------------------

*மன்சுக் மாண்டவியா* (10)

இயற்பியல் விஞ்ஞானி சர்.சீ.வி. ராமனின் ராமன் விளைவுகள் என்ற அரிய கண்டுபிடிப்பை சிறப்பிக்கும் வகையில், திருச்சியில் நாளை மறுநாள் நடைபெற உள்ள மாபெரும் நடைபயணத்தில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா

பங்கேற்கிறார். திருச்சி தேசியப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இருந்து சர்.சீ.வி ராமன் பிறந்த இடமான திருவானைக்காவல் வரை, 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு இந்த நடைபயணம் அமைகிறது. இந்திய நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய தலைவர்களின் பங்களிப்பை, இளம் தலைமுறையினருக்கு எடுத்துரைக்கும் வகையில், மத்திய இளைஞர் நலத் துறை சார்பில், நாடு முழுவதும் இந்த நடைபயணம் இடம்பெறுகிறது.

---------------------------

வேவ்ஸ் *(6)*

இந்தியாவில், திரைப்படங்களுடன் நெருங்கிய தொடர்புடையதும், கதைகள் மற்றும் உணர்ச்சிகள் குறித்து, எளிய முறையில் பார்வையாளர்களுக்கு உணர்த்தும் சுவரொட்டிகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில், வேவ்ஸ் எனப்படும் உலக ஆடியோ விஷுவல் பொழுது போக்கு உச்சி மாநாடு, இது தொடர்பான போட்டிக்கு அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

வேவ்ஸ்- (வாய்ஸ்) (18)

இந்திய தேசிய திரைப்படக் கழகம், சர்வதேச திரைப்படக் கழகம், மற்றும், இமேஜ் நேஷன் தெருவோரக் கலைக்குழு ஆகியவை இணைந்து, இந்திய திரைப்பட சுவரொட்டிகளின் வளமான பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் வகையிலான போட்டியை நடத்துகின்றன. இந்த போட்டிகள், டிஜிட்டல் மற்றும் நேரடியாக கைகளால் வரைதல் என்ற 2 பிரிவுகளில் நடத்தப்படுகிறது. திரைப்பட சுவரொட்டி தயாரிப்புப் போட்டியானது இதற்கு பின்னால் உள்ள கலையின் செழுமையையும், கலைஞர்களின் கைத் திறனையும் தற்போதைய பார்வையாளர்களுக்கு கொண்டு சேர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. டிஜிட்டல் சுவரொட்டிகள் மற்றும் கைகளால் வரையப்படும் சுவரொட்டிகள் தொடர்பான படைப்புகளை, வரும் மார்ச் 15ஆம் தேதிக்குள், WAVESINDIA.ORG என்ற இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. வெற்றி பெற்றவர்கள் குறித்த அறிவிப்பு ஏப்ரல் 1ஆம் தேதியன்று அறிவிக்கப்பட

உள்ளது. இந்த போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாச 50 ஆயிரம் ரூபாயும், 2ஆம் பரிசாக 30 ஆயிரம் ரூபாயும், 3ஆம் பரிசாக 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பான வகையில் வடிவமைக்கப்பட்ட 20 திரைப்பட சுவரொட்டிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வேவ்ஸ் உச்சி மாநாட்டின் போது காட்சிக்கு

வேவ்ஸ்- (வாய்ஸ்) (7)

வைக்கப்பட உள்ளது. இந்த போட்டி தொடர்பாக மேலும் தகவல்களை தெரிந்து கொள்ள, WAVESINDIA.ORG என்ற இணைய தளத்தை அணுகலாம். உலகளாவிய ஊடக மற்றும பொழுது போக்குத் துறையின் கவனத்தை இந்தியாவின் பக்கம் ஈர்த்து, இந்திய ஊடகம் மற்றும் பொழுது போக்குத் துறையுடன் அதன் சிறப்பு இயல்புகளை இணைப்பதை நோக்கமாக கொண்ட வேவ்ஸ் உச்சி மாநாடு வரும் மே மாதம் 1ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை மும்பையில் நடைபெற உள்ளது.

---------------------------

*ராணுவ தளபதி* (8)

பிரான்ஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, அந்நாட்டு ராணுவ தளபதி ஜெனரல் பியர் ஷில்-லுடன், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இருநாட்டு ராணுவத்தினருக்கு இடையேயான பிணைப்பை மேலும் வளர்ப்பது குறித்தும், உலகளாவிய அமைதி, மற்றும், பாதுகாப்பு குறித்தும், இந்த பேச்சு வார்த்தையின் போது விவாதிக்கப்பட்டது. முன்னதாக, ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, பிரான்ஸ் ராணுவத்தின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

---------------------------

*ரிசர்வ் வங்கி* (10)

நாட்டின், தனியார் துறை சார்ந்த தொழிற்சாலைகள் கடந்த 2023-24ஆம் நிதியாண்டில் கடன் சுமையைக் குறைத்ததோடு, அதிக அளவு லாபத்தை ஈட்டி உள்ளதாகவும், இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. இந்த நிதியாண்டின், தனியார் நிறுவனங்களின் லாபத் திறன் 15.3 சதவிகிதம்

உயர்ந்ததாகவும், இது, அதற்கு முந்தைய 2022-23ஆம் நிதியாண்டில் 4.2 சதவிகிதமாக இருந்தது என்றும், ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனங்களின் வட்டி செலுத்தும் செயல்பாட்டுத் திறன் 4.1 சதவிகிதமாக அதிகரித்துள்ளது என்றும், இந்நிறுவனங்களின் அசையா சொத்துக்கள் 10 சதவிகித அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளதாகவும், ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

---------------------------

*காரைக்கால் பேரணி* (10)

காரைக்கால் பாலிடெனிக் கல்லூரி மற்றும் வரிச்சிக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில், தொழுநோய் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது. இப்பேரணியை கல்லூரி முதல்வர் திரு. பிரான்சிஸ் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் டாக்டர் நந்தினி ஆகியோர் கொடியசைத்து தொடக்கி வைத்தனர். பாலிடெக்னின் கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கிய இப்பேரணி, வரிச்சிக்குடி, ராயன் பாளையம் பிரதான சாலை வழியாக சென்று, பாட்கோ காலணியில் முடிவடைந்தது. இப்பேரணியில், பாலிடெக்னிக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம், மற்றும், தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

---------------------------

*ஜிப்மர்-ஏனாம்* (9)

ஏனாமில், ஜிப்மர் சார்பில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்நோக்கு மருத்துவமனை பணிகளை, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனை தொடர்ந்து, புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், ஏனாம் மண்டல நிர்வாகி ஆர். முனுசாமி மற்றும் மருத்துவ அதிகாரிகளுடன் அவர் கலந்தாலோசித்தார். ஏனாம் ஜிப்மர் மருத்துவமனைக்கு தேவையான சிடி ஸ்கேன் உள்ளிட்ட மருத்துவ வசதிகள், மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களை பணியில் அமர்த்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

---------------------------

*வானிலை (10)*

தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, நாளை தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், காரைக்காலிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியிலும், வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 27,28ஆம் தேதிகளில், கடலோர மற்றும் உள் தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒருசில பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

உலகளாவிய பொருளாதார மந்த நிலையிலும் இந்தியா வளர்ச்சியை நோக்கி பயணிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள சுகாதார நிறுவனங்களில், சிறந்த மருத்துவ வசதிகளை பரவலாக்க வேண்டியதன் அவசியம் குறித்து, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வலியுறுத்தி உள்ளார்.

இந்தியக் கடலோரக் காவல் படையின் நிறுவன தினம் இன்று கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர், வரும் மார்ச் மாதம் 10ஆம் தேதி, துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்குவதாக சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்துள்ளார்.